குறைக்கமுடியுமோ, நியாயமான வியாபாரிகளுக்கு, அதைக் குறைக்க அரசு முயலும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல், தம்மம்பட்டி பகுதிகளில் ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் நதிகளில் கலப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. கந்தசாமி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதிகளில் உள்ள ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் வசிஷ்டா நதியிலும், தம்மம்பட்டி பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுவேதா நதியிலும் கலந்து பொதுமக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகியுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

அறிக்கை

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, தலைவாசல் பகுதியில் 10 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அத்தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 153.5 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. இத்தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரானது, அருகிலுள்ள சிறு ஓடையின் வழியாக, சர்வாய் ஏரியை அடைந்து இறுதியில் வசிஷ்டா நதியில் கலக்கின்றது.

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

2. ஆத்தூர் தாலுகா, தம்மம்பட்டி பகுதியில் அமைந்துள்ள 9 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 162 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. அத்தொழிற்சாலைகளுள் 6 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது, நேரடியாக சுவேதா நதியில் கலக்கின்றது. மற்ற 3 தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் ஓடையில் வெளியேற்றப்பட்டு சுவேதா நதியைச் சென்றடைகின்றது.

3. மேற்குறிப்பிட்ட அனைத்து தொழிற்சாலைகளும், 1974-ஆம் ஆண்டு நீர் (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி வாரியத்தின் இசைவாணை கேட்டு விண்ணபித்திருந்தன. அந்த தொழிற்சாலைகள், தொழிற்சாலைக்கழிவு நீரை வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகட்கு ஏற்ப சுத்திகரிப்பு செய்வதற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் வாரியம் அத்தொழிற்சாலைகட்கு இசைவாணை அளித்தது.

4. 18-2-1994 மற்றும் 21-3-1994 ஆகிய நாட்களில், ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் மற்றும், ஆத்தூர் ஜவ்வரிசி தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்கண்ட தொழிற்சாலைகள், தொழிற்சாலைக்கழிவு நீரை தொழிற்சாலைகளின் வளாகத்திலிருந்து வெளியேற்றுவதை நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய தனித்தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அல்லது பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும்படியும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளின் சொந்த நிலங்களில் பாசனத்திற்காக பயன்படுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

5. தலைவாசல் மற்றும் தம்மம்பட்டி பகுதிகளிலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும், 31-5-1994-க்குள் இதற்கான ஒரு நிறுவனம் அமைப்பதற்கும் மற்றும் ஒவ்வொரு தொழிற்சாலையிடமிருந்தும் பங்குத்தொகையின் முதல் தவணையாக ரூபாய் 5,000/- கட்டவும் சம்மதித்துள்ளனர்.

6. சேலத்திலுள்ள ஜவ்வரிசித் தொழிற்சாலைகளை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டுக்கொண்டது. அதன்படி 73 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் ஒன்று சேர்ந்து சேலம் சாகோ எஃப்புளூயென்ட் ட்ரீட்மென்ட் லிமிட்டெட்

என்ற நிறுவனத்தை அமைத்துள்ளன. பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பது, இயக்குவது மற்றும் பராமரிப்பது ஆகியவற்றுக்கு இந்த நிறுவனமே பொறுப்பு ஆகும். இந்த நிறுவனம் ரூபாய் 3.75 இலட்சம் பங்குத் தொகையாக வசூலித்துள்ளது. இந்தப் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துருவை தயாரிக்குமாறு இந்த நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

7. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியின் முன்னேற்றத்தினைத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முனைப்புடன் கண்காணித்து வருகின்றது.

8. இந்தப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி இயக்கும்பொழுது, ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீரால் வசிஷ்டா நதியிலும், சுவேதா நதியிலும் மாசு ஏற்படுவது தடுக்கப்படும்.

முற்பகல் 11.45

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே தலைவாசல் பகுதியில் 10 தொழிற்சாலைகளின் கழிவுநீர் வசிஷ்டா நதியிலும், தம்மம்பட்டிப் பகுதியில் 9 தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுவேதா நதியிலும் கலப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கழிவு நீர் கலப்பதன் காரணமாக அந்தப்பகுதியில் ஏறத்தாழ 20 கிராமங்களில் குடிநீர் பாதிக்கப்படுகிறது. பொது மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள். அதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்கா தலைவாசல் பகுதியில் 10 ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலிருந்து நாள் ஒன்றுக்கு 153.5 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீரை அந்த ஆலைகள் வெளியேற்றுகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது அருகிலுள்ள சிறு ஓடைகளின் வழியாக சர்வாய் ஏரியை அடைந்து இறுதியில் வசிஷ்டா நதியில் கலக்கிறது. ஆத்தூர் தாலுக்கா தம்மம்பட்டி பகுதியில் அமைந்துள்ள 9 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் நாள் ஒன்றுக்கு 162 கிலோ லிட்டர் தொழிற்சாலை கழிவு நீரை வெளியேற்றுகின்றன. அத் தொழிற்சாலைகளுள் 6 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது நேரடியாக சுவேதா நதியில் கலக்கிறது. மற்ற 3 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், ஓடையின் மூலம்

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

சுவேதா நதியில் கலக்கிறது. இந்தப் பாதிப்பின் காரணமாக 18-2-1994 மற்றும் 21-3-1994 ஆகிய நாட்களில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் மற்றும் ஆத்தூர் ஜவ்வரிசி தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை தொழிற்சாலைகளின் வளாகத்திலிருந்து வெளியேற்றுவதை நிறுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய தனித் தனியாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதே போல தலைவாசல் தம்மம்பட்டி பகுதியில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளுடைய உரிமையாளர்கள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்புக் கொண்டுள்ளார்கள். மேலும் 31-5-1994-க்குள் இதற்கான ஒரு நிறுவனம் அமைப்பதற்கும் மற்றும் ஒவ்வொரு தொழிற்சாலைகளிலிருந்தும் பங்கு தொகையாக முதல் தவணையாக ரூ. 5000/- கட்டவும் சம்மதித்துள்ளார்கள். அதேபோல சேலத்திலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகள் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டுக்கொண்டது. அதன்படி 73 ஜவ்வரிசி தொழிற்சாலை அதிபர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சேலம் சாகோ எஃப்ளூயென்ட் ட்ரீட்மென்ட் லிமிட்டெட் என்ற நிறுவனத்தை அமைத்துள்ளார்கள். பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்கவும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அதை உடனடியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். அதற்கான பணிகளை மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. விரைவில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 மாதத்திற்கு முன்பு அந்தப் பகுதியில் உள்ள 8 கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் அந்த 8 தொழிற்சாலைகளின் மீது குறிப்பிட்டு என்னிடம் மனுக்கள் கொடுத்தார்கள். அந்த மனுக்களை நான் மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் 8 தொழிற்சாலைகள் மீதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எனக்கு பதிலும் அனுப்பியிருக்கிறார்கள். என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ன அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம் உடனடியாக ஒரு காமன் எஃப்ளூயென்ட் ட்ரீட்மென்ட் பிளான்ட் போடவேண்டும் என்று அறிவுறுத்தப்

பட்டுள்ளார்கள். உடனடியாக அந்த ஆலைகளையெல்லாம் மூடிவிட்டால் தொழில் பாதிக்கும், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்போது நம்முடைய மாண்புமிகு கந்தசாமி அவர்கள்கூட பரிந்துரை செய்கிற நிலைமையெல்லாம் ஏற்படும். எனவே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு விரைந்து அவர்கள் 'காமன் ஃப்ளுயன்ட் டிரீட்மென்ட் பிளான்ட்' அமைக்க வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மீண்டும் அது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது அந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்ற பணியில் அவர்களோடு சேர்ந்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்த ஆலை அதிபர்கள் அவர்களோடு சேர்ந்து இணைப்பாக செயல்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலை கழிவுப் பொருட்கள் மற்றும் புகை சுற்றுப் புறச்சூழலைப் பாதிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் மு. காளிராஜன், மற்றும் திரு. ஓ. எஸ். அமர்நாத் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் மு. காளிராஜன் இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் உள்ள டி.வி.எஸ். ரப்பர் ஆலையிலிருந்து வெளியே வரும் கழிவுப் பொருட்கள் மற்றும் புகை, அப்பகுதியின் சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதித்துள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ரப்பர் பிரிவு மற்றும் திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டயர் சர்வீஸ் பிரிவு ஆகிய தொழிற்சாலைகள் மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கோச்சடை கிராமத்தில் அமைந்துள்ளது.